முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வாயிலார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.01.2019, புதன்கிழமை

1. **ஆறுமுக ஞானியே தருமராசா**
**அருள் தயவு காட்டும் குருராசா**
**மாறுதல் தன்னை கலியுகமும்**
**மாதவசி உன் சேவையால் அடையுமென கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறைவிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே இருபானை திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் 09.01.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு வாயிலார் நாயனார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் வகுத்த
ஞானம் பெற்ற சீடர்கள் மூலமே
ஞானயுகத்தில் நன்மைகள் நடக்க இருக்க

4. இருக்கவே கலிவாழ் மக்களே
எங்கு அரங்கன் நாமசெபம்
கருத்தாக தானதருமமும் நடக்கிறதோ
கட்டாயம் அங்கு பங்களிப்பு செய்து

5. செய்துமே அரங்கன் சீடர்களுடன்
சேவையில் கலந்து உதவியே
அய்யம் கொள்ளா சரணடைவு கொண்டு
அரங்க ஞானியே தலைவனென்னும்

6. என்னும் நம்பகம்பட வந்து
ஏழாம் படை வீடு தன்னிலே
அன்னதான சேவை பெருக்கி
அருளமுது உண்டு மக்களெல்லாம் வர

7. வருகவே வல்லமையும் வளமும்
வறுமை விரட்டி ஒட்டும்
முருகப்பெருமான் தயவும் ஆசியும்
முழுமை ஞானமும் வந்தடைந்து

8. அடைந்துமே மக்கள் எல்லாம்
அரங்கன் வழிகாட்டலின் பேரில்
சோடை போகா ஞானியாவர்
சுத்தநெறி காட்டும் புதுமை உலக

9. உலகமெங்கும் மாறுதல் பண்ணும்
உயர் மக்களாகி உலகோர்
கலகமிடர் மாச்சர்யம் இல்லாத
கண்ணியமிக்க வாழ்வாதாரம் பெருகி

10. பெருகியே கலிகால மக்கள்
பிரச்சனை பேரிடர் அணுகாத
தருமபலம் பெருக்கி கொண்டே
தவராசன் தயவு சக்தி மூலம்

11. மூலம் காப்பும் தேற்றமும் பெறுவர்
முழுமை ஞானமும் அடைவர்
காலம் வென்ற அரங்கனே உலகில்
கந்தவேலன் அம்சம் எனும் நிலை உயர்வர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வாயிலார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஆறுமுகப்பெருமானின் அவதார ஞானியே அரங்கமகாதேசிக தருமராசனே அருட்தயவு காட்டும் குருராசனே அற்புதமான உமது தன்னலமற்ற தொண்டுகளாய் துன்பம்மிக்க இந்த கலியுகமும் ஞானயுகமாக மாறிடும் என்றே அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் 09.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வாயிலார் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வாயிலார் நாயனார்.

உயர்வான தூயநெறியாம் அரங்கன் வகுத்திட்ட உயர் ஞானநெறிகளை ஏற்றுக் கொண்டு அதன்படி நடந்து ஞானம் பெற்ற உயர் அரங்கனின் சீடர்கள் மூலமாக இவ்வுலகினில் கலியுகம் மாறி ஞானயுகமாக ஆகி ஞானயுகத்தினில் நன்மைகள் பெருமளவு நடக்க இருக்கின்றதப்பா.

ஆகவே கலியுகத்தினில் வாழும் மக்களே உலகினில் எங்கெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெயர் உச்சரிக்கப்படுகிறதோ, எங்கெல்லாம் அரங்கனின் பெயரால் தானதருமங்கள் நடத்தப்படுகின்றதோ அங்கெல்லாம் நீங்கள் கட்டாயம் அந்த பூஜைகளிலும், தானதருமங்களிலும் கலந்து தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும், அரங்கனின் அறப்பணிகளில் கலந்து கொண்டு அரங்கனின் சீடர்களுடன் இணைந்து சேவைகளை செய்து சற்றும் சந்தேகம் கொள்ளாமல் அரங்கனே உண்மை ஞானசற்குரு என்றே முழுநம்பிக்கை கொண்டு அரங்கனை குலகுருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஆங்கே முருகப்பெருமானின் அவதாரமாக வீற்றிருக்கும் ஆறுமுக அரங்கமகா ஞானியரின் திருவடிகளே கதியென பயபக்தியுடன் பணிந்து அரங்கமகானே நீரே எமது தலைவன் என்றே முழுமனதாய் ஏற்று சரணாகதியினை அடைந்து ஆங்கே அரங்கமகான் நடத்தும் அன்னதான சேவைகளில் பங்களிப்பு செய்து சேவைகளை பெருக்கி வருவதுடன் ஞானிகள் அருளிய அருள் உணவாம் குடில் உணவினை உண்டு வர வேண்டும்.

அரங்கனின் திருவடி பணிந்திட அவரவர்க்கும் சர்வ வல்லமையும், சர்வ வளமும் பெருகிடும். வறுமை எனும் இல்லாமை அவர்களை விட்டு மிரண்டு ஓடிடும். வறுமையை விரட்டி ஓட்டும் வல்லமைமிக்க முருகப்பெருமானின் தயவும் அருளாசியும் முழுமை ஞானமும் அவர்களை வந்தடையும்.

முருகப்பெருமானின் அருளாசிகளையும் ஞானமும் பெற்றிட்ட மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வழிகாட்டலில் பின்தொடர்ந்து சென்று வீண் போகாதவர்களாய் குற்றமற்ற ஞானிகளாவார்கள். தூயநெறியினால் உண்டாகும் புதுமை உலகமாம் ஞான உலகினில் மாறுதல்களைச் செய்யும் உயர் ஞான மக்களாகிடுவர். உலக மக்களெல்லாம் கலகம் இல்லாத வாழ்வை வாழ்வர், பாகுபாடற்ற வாழ்வை வாழ்வர், கண்ணியம்மிக்க வாழ்வை வாழ்வார்கள். அவர்களது வாழ்வாதாரம் பெருகி கலியுக மக்களும் பிரச்சனைகள் இல்லாத அமைதியான வாழ்வை இயற்கை பேரிடர்களால் துன்பம் நேராத வகையில் அவரவரும் தானதருமங்களை செய்து தர்மபலம் பெருக்கி தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவு சக்தி மூலம் அருள் பாதுகாப்பையும் கடைத்தேற்றத்தையும் அடைந்து சிறப்படைவார்கள், முழுமை ஞானமும் பெற்று சிறப்படைவார்கள்.

காலத்தை வென்றிட்ட அரங்க மகானே உலகினில் உள்ள கந்தவேலனின் அம்சம் எனும் உண்மையை உணர்ந்து சிறப்பார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வாயிலார் நாயனார்.

–சுபம்–